உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள் (குறுக்கீடு). அதைத்தான் சொல்கிறார். அவைக் குறிப்பிலே என்ன இருக்கிறது என்பதை நீங்கள் சொன்னதற்கு, பேரவை முன்னவர் இங்கே தெரிவித்ததற்குப் பிறகு, வேறு எந்த விவாதமும் வேண்டாம். நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு, இந்த உரிமைப் பிரச்சினையில் வேறு எந்த விவாதமும் இருப்பது சரியல்ல. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்குப் பிறகு, நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கை.

கிறித்துவராக மாறிய வன்னியகுல சத்திரியர், அவர்தம் உட்பிரிவினருக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகைகள் வழங்குவது குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 110-இன் கீழ் மிகப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள்பற்றிப் பேரவைக்கு அறிக்கை அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த அறிக்கையைப் பேரவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைப்பார்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி, வன்னியகுல சத்திரியரும், அவர்தம் உட்பிரிவுகளும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளமையால், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்குரிய கல்விச் சலுகைகளோடு, அரசு வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதிலும் 20 சதவிகித ஒதுக்கீட்டின் கீழ் பயன்பெற்று வருகின்றனர். ஆனால் கிறித்துவராக மதம் மாறிய வன்னியகுல சத்திரியரும், அவர்தம் உட்பிரிவுகளும் அரசு வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்குரிய ஒதுக்கீட்டின் கீழ் பயன்பெற முடியாமல் பிற்படுத்தப்பட்டோருக்குரிய ஒதுக்கீட்டின்கீழ்தான் பயன்பெற்று வருகின்றனர். 23-4-1993 அன்று வன்னிய சமுதாயத்தின் சார்பில் உள்ள 23 சங்கங்களினுடைய பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து, தங்களது மிக முக்கியக் கோரிக்கையான கிறித்துவ மதத்திற்கு மாறிய வன்னியர்களுக்கும், இந்து மத வன்னியர்களுக்குள்ள சலுகைகள் அனைத்தும் கிடைக்க ஆவன செய்திட வேண்டுகோள் விடுத்தனர், வன்னிய

சமுதாயத்தின் மிக முக்கியமான இந்தக் கோரிக்கையை உடனடியாகப் பரிசீலனை செய்வதாக நானும் உறுதிமொழி அளித்தேன். வன்னிய சமுதாயச் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் அளித்த உறுதிமொழிக்கேற்ப வன்னிய குல சத்திரியரும் அவர்தம் உட்பிரிவினரும் கிறித்துவராக மதம் மாறினாலும், அவர்களும் மிகப் பிற்படுத்தப்பட்டோராகவே கருதப்பட்டு, உரிய சலுகைகள் அனைத்தும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உத்திரவினால் வன்னிய சமுதாயத்தினரின் மிக முக்கியமான கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது. இனி, கிறித்துவர்களாக உள்ள வன்னியர்கள் கூட அவர்களும் மிகப் பிற்படுத்தப்பட்டவராகவே கருதப்பட்டு, ஏனையக் கல்விச் சலுகைகளோடு, அரசு வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதிலும் 20 சதவிகித ஒதுக்கீட்டின் கீழ் பயன்பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி.

4. கவன ஈர்ப்பு.

வேடந்தாங்கல் ஏரிக்கரையில் கட்டிடங்கள் கட்டும் பணி தொடங்கியிருப்பதால் பறவையின வருகை மற்றும் வாழ்க்கைப் பாதிப்பு ஏற்படுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எச். எம். ராஜு இருக்கையில் இல்லை.

அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேடந்தாங்கல் ஏரி அருகில் வர்த்தகக் கட்டிடங்கள் 'கட்டும் பணி' தொடங்கியிருப்பது குறித்து'' மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.